بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 25/07/2025 அன்று U.K – ஆல்டனிலுள்ள ஹதீக்கத்துல் மஹ்தியில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# 2025 ஆம் ஆண்டின் பிரிட்டன் ஆண்டு மாநாட்டை முன்னிட்டு பணியாளர்கள் மற்றும் விருந்தினர்களுக்குப் பொன்னான அறிவுரைகள்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ ـ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ـ

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝

இன்ஷா அல்லாஹ்! இன்று மாலை முதல் பிரிட்டன் ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சிகள் முறைப்படி துவங்கும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறியுள்ளது போல், இந்த மாநாடு பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதில் ஜமாஅத்தின் கல்வி, நல்லொழுக்கம் மற்றும் ஆன்மிக நிலையின் மேம்பாட்டிற்கான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இதில் பங்கேற்கும் அனைவருக்கும் இதிலிருந்து முழுமையாகப் பயனடைய அல்லாஹ் நல்வாய்ப்பளிப்பானாக. இந்த நேரத்தில் நான் மாநாட்டில் தொண்டாற்றுபவர்கள் மற்றும் பங்கேற்பாளர்களிடம் சில விஷயங்களைக் கூற விரும்புகிறேன்.

இஸ்லாத்தில் விருந்தினர்களை கண்ணியப்படுத்துவதற்கும் மரியாதை செய்வதற்கும் மிகவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இதை மிகவும் வலியுறுத்தியுள்ளார்கள். விருந்தினருக்கு அவரது முறையான உரிமையை வழங்குங்கள் என்று அன்னார் கூறியுள்ளார்கள். இந்த முறையான உரிமை என்பது, சூழலுக்கு ஏற்ப சில நாட்கள் விருந்தோம்பல் செய்வதாகும். அன்னாருடைய இந்த அறிவுரையின் தாக்கத்தினால்தான், சஹாபிகள் தியாகம் புரிந்து, தமது மற்றும் தமது மனைவி பிள்ளைகளின் பசியைப் பொருட்படுத்தாது, தமது உரிமையை விட்டுக்கொடுத்து விருந்தோம்பல் செய்து வந்தார்கள்.

ஆகவே, இந்நாட்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் விருந்தினர்களாக மாநாட்டிற்கு வருகை தரும் அவர்களுக்கு எல்லா வகையிலும் தொண்டாற்றுவதும், விருந்தோம்பல் செய்வதும் ஒவ்வொரு பணியாளர், ஒவ்வொரு தொண்டர் மற்றும் ஒவ்வோர் அதிகாரியின் கடமையாகும். அவர்கள் எந்தத் துறையில் பணிபுரியக்கூடியவர்களாக இருந்தாலும் சரியே! இந்நாட்களில் குறிப்பாக உழைப்பு, பொறுமை மற்றும் துஆவுடன் செயல்படுங்கள். **விருந்தினர்கள் தரப்பிலிருந்து சில சமயங்களில் கடினமான வார்த்தைகளைக் கேட்க நேர்ந்தாலும் உயர்வான நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தியவர்களாக அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக அதைக் கண்டும் காணாமல் இருந்து விடுங்கள்.** இங்கு பல்வேறு துறைகள் உள்ளன. கடந்த குத்பாவிலும் நான் சுருக்கமாகக் குறிப்பிட்டிருந்ததுபோல், ஒவ்வொரு துறையின் அதிகாரியும் அவரது உதவியாளர்களும் தம் கடமைகளை அழகிய முறையிலும் நற்குணத்துடனும் நிறைவேற்ற வேண்டும்.

இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் எண்ணற்ற சம்பவங்களும் உள்ளன. விருந்தினர்களிடம் எவ்வாறு நன்முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்று அன்னார் குறிப்பாக அறிவுறுத்தி வந்தார்கள். அன்னாரின் வழிகாட்டல்களும் சம்பவங்களும் அன்னாரின் வாழ்க்கை வரலாற்று நூல்களில் பல்வேறு

கோணங்களில், பல்வேறு இடங்களில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அஸ்ஸாமிலிருந்து வருகை தந்த விருந்தினர்களை அன்னார் எவ்வாறு உபசரித்தார்கள் என்பது தொடர்பாக ஒரு பிரபலமான சம்பவமும் உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எவ்வாறு அவர்களை கவனித்துக் கொண்டார்கள் என்ற இந்த சம்பவத்தை நாம் கேட்கிறோம்; அதிலிருந்து இன்புறுகிறோம். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டாற்றுவதற்காக தம்மை அர்ப்பணிக்கும் அனைத்துப் பணியாளர்கள், தொண்டர்கள் மற்றும் அனைவருக்கும் இதில் ஒரு பாடம் உள்ளது.

இவ்வாறே, **விருந்தோம்பலின் மற்றொரு உதாரணத்தை ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது சாதிக் சாஹிப் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்:** “ஒருமுறை நான் லாஹூரிலிருந்து காதியானுக்கு வந்திருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களே தம் கரங்களில் எனக்காக உணவு கொண்டு வந்தார்கள். என்னைப் பார்த்து, தாங்கள் உணவு உண்ணுங்கள், நான் இப்பொழுது தண்ணீர் கொண்டு வருகிறேன் என்று கூறினார்கள். நமது வழிகாட்டியும் தலைவருமான ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் நமக்காக இந்தத் தொண்டைச் செய்யும்போது, நாம் ஒருவருக்கொருவர் எந்த அளவு தொண்டாற்ற வேண்டும் என்று அந்நேரத்தில் உருக்கத்தின் காரணமாக என்னையறியாமல் என் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது.”

இது (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய) ஒரு முன்மாதிரியாக இருந்தது. அன்னாரின் வாழ்க்கை வரலாற்றில் விருந்தோம்பலின் இவ்வாறான பல சம்பவங்கள் காணக் கிடைக்கின்றன.

**ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மக்களிடம் கூறினார்கள்:** “எந்த விருந்தினருக்கும் துன்பம் ஏற்படக்கூடாது என்பதே எப்போதும் எனது சிந்தனையாக உள்ளது. இன்னும் கூறுவதென்றால், இயன்றவரை விருந்தினர்களுக்கு வசதியளிக்க வேண்டும் என்று நான் எப்போதும் இதற்காக வலியுறுத்துகிறேன். விருந்தினரின் உள்ளம் கண்ணாடியைப் போன்று மென்மையானது. அது சற்று தட்டுப்பட்டாலும் உடைந்துவிடும். நீங்கள் அதைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்.”

இதுவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தங்களின் எஜமானர் மற்றும் வழிகாட்டியான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றி விருந்தினர்களை உபசரிப்பது குறித்து நமக்கு வழங்கிய முன்மாதிரியும் அறிவுரையுமாகும். **ஒருமுறை அன்னார் லங்கர்கானாவின் (விருந்தினர் இல்லத்தின்) இன்சார்ஜிடம்,** பாருங்கள்! பல விருந்தினர்கள் வந்துள்ளனர். அவர்களில் சிலரை நீங்கள் அறிவீர்கள்; சிலரை அறியமாட்டீர்கள். எனவே, அனைவரையும் கண்ணியத்திற்குரியவர்களாகக் கருதி அவர்களுக்கு விருந்தோம்பல் செய்வதே பொருத்தமானது என்றார்கள்.

ஆகவே, ஒவ்வொரு பணியாளரும், தமக்கு எந்த இடத்தில் எந்தத் துறையில் பணி ஒதுக்கப்பட்டுள்ளதோ, அங்கே விருந்தினர்களுக்கு விருந்தோம்பல் எனும் அவர்களின் உரிமையை செலுத்துவதற்கு முழுமையாக முயற்சிக்க வேண்டும்.

அனுமதிச் சீட்டு வழங்குவதிலிருந்து மாநாட்டுத் திடலுக்குள் வருவது வரையிலான பல்வேறு துறைகள் உள்ளன. விருந்தினர்களுக்கு இந்தத் துறைகளின் பணியாளர்களுடன் சந்திப்பு ஏற்படுகிறது. அங்கு ஒவ்வொரு பணியாளரும் தம் நற்பண்பையும் உயர்வான நல்லொழுக்கத்தையும் வெளிப்படுத்த வேண்டும். உணவு சமைத்தல் மற்றும் பரிமாறுதல் ஆகிய துறைகளும் உள்ளன. இந்தத் துறையினரும் விருந்தோம்பலின் உரிமையை நிறைவேற்ற வேண்டும். ஏனெனில், இவை விருந்தோம்பலின் மிக முக்கிய பகுதிகளாகும். ஒன்று, விருந்தினர்களுக்கு வயிறார உணவு வழங்கப்பட வேண்டும்; மரியாதையுடன் வழங்கப்பட வேண்டும். லங்கர்கானாவில் பணிபுரிபவர்கள் சிறந்த வகையிலான உணவை சமைக்க முயற்சிக்க வேண்டும். அடுத்தது, தேவைக்கேற்ப உணவு கிடைப்பதையும், பற்றாக்குறை ஏற்படாமல் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும். தூய்மைத் துறையில்

முழுமையான கவனம் செலுத்த வேண்டும். தூய்மை, ஈமானின் ஒரு பகுதியாகும். சிலருக்கு மாநாட்டு நிகழ்ச்சிகளைக் குறித்த சரியான புரிதல் இல்லாததால் அவர்கள் அதை முழுமையாகக் கேட்பதில்லை. பெண்கள் மற்றும் ஆண்கள் இருவரிடத்திலும் ஒழுங்குப் பாதுகாப்புப் பணியாளர்கள், இவ்வாறான மக்களுக்கு அன்போடும் மென்மையோடும் புரிய வைக்க வேண்டும். எவ்வாறிருப்பினும், இந்நாட்களில் பணியாளர்கள் நற்குணத்தின் ஒரு சிறப்புமிக்க முன்மாதிரியை வெளிக்காட்ட வேண்டும் என்பதை எல்லா இடங்களிலும் நினைவில் கொள்ள வேண்டும். மேலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கொண்ட நல்லெண்ணத்திற்கேற்ப முழுமையாகச் செயல்பட முயற்சிக்க வேண்டும்.

**இவ்வாறே, நான் விருந்தினர்களிடமும் சில விஷயங்களைக் கூற விரும்புகிறேன்.** ஜமாஅத்தைச் சாராத ஒருசில விருந்தினர்களும் இங்கு வருகிறார்கள். இந்த (ஒரு)சிலரைத் தவிர மற்ற விருந்தினர்களில் பெரும்பான்மையினர் அஹ்மதிகளாகிய நீங்களே ஆவீர்கள். **நீங்கள் இங்கு மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கேட்பதற்காகவே வந்துள்ளீர்கள். எனவே, நிர்வாகம் சரியாக உள்ளதா, விருந்தோம்பல் சரியாக உள்ளதா, அல்லது ஒரு பணியாளர் எவ்வாறு நடந்துகொண்டார் என்பன போன்ற விஷயங்களுக்கு நீங்கள் முக்கியத்துவம் அளிக்காதீர்கள். உண்மையான நோக்கம் ஆன்மிக உணவைப் பெறுவதே ஆகும். அதற்காகவே நீங்கள் முயற்சிக்க வேண்டும்.** விருந்தோம்பல் செய்பவர்கள் விருந்தோம்பலுக்கான உரிமையை நிறைவேற்ற முழு முயற்சி செய்ய வேண்டும். அதை அவர்கள் செய்கிறார்கள்தான்! ஆனால், அதேபோல் பங்கேற்பாளர்களும், பணியாளர்களிடம் ஏதேனும் பலவீனங்களோ குறைபாடுகளோ இருந்தால் அவற்றைக் கண்டும் காணாமல் இருந்துவிட வேண்டும். நீங்கள் அவ்வாறு செய்யும்போதுதான் எந்த நோக்கத்திற்காக இங்கு வந்தீர்களோ அந்த நோக்கத்தை அடைபவர்களாக ஆவீர்கள். இதனால் பரஸ்பர உறவுகளில் மேலும் உறுதித்தன்மையும் ஏற்படும். அனைத்து விருந்தினர்களும், தாங்கள் இங்கு வந்ததன் நோக்கம் என்ன என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அந்த நோக்கம், உயர்வான நல்லொழுக்கம் மற்றும் அல்லாஹ்வை நினைவுகூர்வதன் மூலமே நிறைவேற முடியும்.

**உணவு உண்ணுமிடத்தில் உணவிற்கு எப்போதும் மதிப்பளிப்பது ஒவ்வொரு விருந்தினரின் கடமை ஆகும். விருந்தினர்கள் ஆண்டு மாநாட்டின் இந்நாட்களில் உணவை அருளாகக் கருதி உண்ண வேண்டும்.** உணவு வீணாவதை நாம் பாதுகாக்க வேண்டும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இதன் மூலம், அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டவர்களுக்கும் எளிமையை உருவாக்க வேண்டும். மாநாட்டின் நோக்கத்தை நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்பதையும், இந்த மாநாட்டின் அருள்களை சேகரித்து அவற்றால் உங்கள் மடியை நிரப்ப முயற்சிக்க வேண்டும் என்பதையும் எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். எந்த நோக்கத்திற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இந்த மாநாட்டைத் துவக்கினார்களோ அந்த அருள்களைப் பெற முயற்சிக்க வேண்டும். அன்னார் கூறியது போல், **செய்யும் வேலை அல்லாஹ்விற்காக இருக்க வேண்டும்; பேசப்படும் விஷயங்கள் இறைவனுக்காக இருக்க வேண்டும்** என்ற இந்த அடிப்படையை ஒவ்வொருவரும் தம் முன் வைத்திருக்க வேண்டும்.

இறைவனை நினைவுகூர்வதில் நமது நாட்களை கழிக்க வேண்டும் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கேட்கும்போதும் இறைவனை நினைவுகூர்வதில் உங்கள் நாவுகளை உற்சாகத்துடன் வைத்திருங்கள். அதன் பிறகு, இங்குமங்கும் செல்லும்போதும், சந்திக்கும்போதும், மக்களுடன் பேசும்போதும் தூய்மையான மார்க்க விஷயங்கள் பேசப்பட வேண்டும்; அல்லாஹ்வின் நினைவு பற்றிய பேச்சுக்களாக இருக்க வேண்டும். இது நிகழும்போது பிறகு எப்படிப்பட்ட ஒரு சூழல் உருவாகும் என்றால், நிச்சயமாக அவ்வாறான சூழலுக்காகவே இந்த மாநாடு நடத்தப்படுகின்றது.

**நீங்கள் மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கவனமாகக் கேட்கவில்லை என்றால், நீங்கள் இங்கு மாநாட்டிற்கு வருவதில் எந்தப் பயனும் இல்லை என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் இது குறித்து மிகுந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளார்கள்.** நமது நோக்கம் நம்மை சீர்திருத்திக்கொள்வதாகும்; நமது மார்க்க அறிவை அதிகரிப்பதாகும்; நமது ஆன்மிக நிலையை மேம்படுத்துவதாகும் என்பதை நாம் குறிப்பாக நினைவில் கொள்ள வேண்டும். அதற்காக நாம் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். நல்லொழுக்க ரீதியாகவும் நமது நிலையை மேம்படுத்த வேண்டும். நமது நண்பர்கள் மற்றும் சகோதரர்களுக்காக தியாகம் செய்யும் உணர்வை உருவாக்க வேண்டும். மனக் கசப்புகளை அகற்ற வேண்டும். இதுவும் ஒரு மிகப் பெரிய நோக்கமாகும்.

ஆயிரக்கணக்கான மக்கள் கூடியுள்ள இந்தச் சூழல் உருவாகியுள்ளது. இதுவும் எப்படிப்பட்ட ஒரு சூழல் என்றால், இதில் ஒருவர் மற்றவருடன் நன்மையுடனும் சகோதரத்துவத்துடனும் நடந்துகொண்டால், இஸ்லாமியப் போதனையின் தனிச்சிறப்பான அன்பு, நேசம், சகோதரத்துவம் ஆகியவை நிலவும் ஒரு சூழல் உருவாகும். இதன்படி செயல்படுவதன் மூலமே மனிதன் அல்லாஹ்வின் பார்வையில் வெற்றியாளனாகவும் அவனது அருள்களைப் பெறுபவனாகவும் ஆக முடியும். ஆகவே, **பணியாளர்கள் மற்றும் விருந்தினர்கள் இருவரும், தம் நல்லொழுக்கங்கள் எப்போதும் உயர்வாக இருக்க வேண்டும் என்பதிலும் ஒவ்வொரு தீமையை விட்டும் தப்பிக்க எப்போதும் துஆ செய்து வர வேண்டும் என்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்.**

*அண்டை வீட்டார்களைக் கவனத்தில் கொள்வது, சாலை விதிகளைக் கடைப்பிடிப்பது, தூய்மை, குழந்தைகளைக் கொண்ட பெண்கள் தொடர்பான விஷயங்கள், பார்க்கிங் மற்றும் நுழைவு வாயில்கள் உள்ளிட்ட சில இதர விஷயங்கள் குறித்தும் ஹுஸூர் அவர்கள் அறிவுரைகளை வழங்கினார்கள்.*

*ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:*

நீங்கள் அனைவரும் இந்த மாநாட்டிலிருந்து முழுமையாகப் பயனடைபவர்களாகவும், இதன் அருளிலிருந்து பயனடைபவர்களாகவும் அல்லாஹ் உங்களை ஆக்குவானாக. இங்கிருந்து நீங்கள் திரும்பிச் செல்லும்போது அல்லாஹ்வின் அருள்களை அள்ளிச் செல்லும் உங்கள் மடிகளுடன் நீங்கள் திரும்பிச் செல்ல வேண்டும். நீங்கள் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசுகளாக ஆகியவாறு நீங்கள் திரும்பிச் செல்ல வேண்டும். அல்லாஹ் உங்கள் மீது உங்கள் வாழ்விலும், உங்கள் சந்ததியினர் மீதும் என்றென்றும் அருள் புரிவானாக. நீங்கள் எப்போதும் அஹ்மதிய்யத்தின் ஒரு பயனுள்ள அங்கத்தினராக உலகில் வாழ்பவர்களாக இருக்க வேண்டும். உங்கள் சந்ததியினரும் இவ்வாறே ஒரு தூய்மையான, பயனுள்ள அங்கத்தினராக உலகில் வாழ்பவர்களாக இருக்க வேண்டும். கியாமத் வரை இந்தத் தொடர் நீடிக்க அல்லாஹ் அருள்வானாக!.

கடந்த ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டும் பல்வேறு துறைகளின் கண்காட்சிகள் உள்ளன. அவை நல்ல, தகவல் நிறைந்த, அறிவை அதிகரிக்கும் ஊடகங்களாகவும் உள்ளன; சுவாரஸ்யமானதாகவும் உள்ளன. அவற்றையும் பார்க்க முயற்சி செய்யுங்கள். அதேபோல், Book Stall -லில் புதிய நூல்களும் வந்துள்ளன. அங்கும் கண்டிப்பாகச் செல்லுங்கள். இடைவேளையில் கடைவீதிகளில் பொருட்களை வாங்குவதிலும் விற்பதிலும் மட்டும் ஈடுபடாமல், இந்த ஆன்மிக உணவு விரிப்பிலிருந்தும் பயனடைய முயற்சி செய்யுங்கள். அல்லாஹ் அனைவருக்கும் நல்வாய்ப்பளிப்பானாக.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ

وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ

يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)